Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை


☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 121 · செவ்வாய்க்கிழமை Tuesday · 03.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# “தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும், புதிய தொழில் முதலீடுகள்”

## முதலமைச்சர் ஸ்டாலின் பெருமிதம்




சென்னையில் ஆங்கில வாரஇதழ்சார்பில்நடைபெற்ற 'TAMIL NADU LEADERSHIP SUMMIT' என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், "அனைத்து துறைகளிலும் ஆல்-ரவுண்டராக உயர்ந்து இருக்கிறோம். அனைத்து பகுதிகளிலும் பரவலான, சமச் சீரான எல்லோருக்குமான வளர்ச்சியை திராவிட மாடல் ஆட்சியில் சாதித்துக் காட்டியிருக்கிறோம். அதனா ல்தான், இந்த ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும், புதிய தொழில் முதலீடுகள் மூலமாக முன்னணி நிறுவ னங்களின் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, வேலைவாய்ப்புகளை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் பெரிய பெரிய மேம்பாலங்கள், பல்வேறு நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. கிராம சாலைகளையும் மேம்படுத்தி இருக்கிறோம்.காலநிலை மாற்றத்தை மனதில் வைத்து Advanced-ஆக செயல்படுவதிலும் தமிழ்நாடு தான் இன்றைக்கு முன்னோடியாக இருக்கிறது. மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் என நிறைய இருக்கின்றன. என்னால் உறுதியாக சொல்ல முடியும், இத்தனை முத்திரைத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் மாநில அரசு இந்தியாவிலேயே வேறு எங்கும் நிச்சயமாகஇருக்கமுடியாது. இதையெல்லாம் யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

நாங்கள் இப்படி ஆல் ரவுண்டராக அடித்து ஆடுவதால் தான், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு நம்பர் 1 மாநிலமாக உள்ளது. இதை ஒன்றிய பா.ஜ.க.அரசே பாராட்டியிருக்கிறது. நம்பர் 1 மாநிலம் மட்டுமல்ல, இரட்டைஇலக்கவளர்ச்சியை எட்டிய 'One and Only' மாநிலமும் நம்முடைய தமிழ்நாடு தான். பொருளாதார வளர்ச்சியில் மட்டுமல்ல, மனித மேம்பாட்டு குறியீட்டிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்பது தான் எங்களின் பெருமைக்குரிய விஷயம்" என்றார்.

மேலும் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "இந்தியா முழுவதும் பாஜக ஆளும் மாநிலங்களில், அதாவது 'டபுள் எஞ்சின்' என்று அவர்கள் சொல்லும் 'டப்பா எஞ்சின்' ஓடும் மாநிலங்களில் இப்படி ஒரு வளர்ச்சியை காட்டிட முடியுமா? அவர்கள் செய்வதெல்லாம் வன்முறை, வெறுப்பு பேச்சு, பிற்போக்கு வாதம். அதற்கு நேர்மாறாக, முற்போக்கு அரசு எங்கள் திராவிட மாடல் அரசு.முக்கியமாக,நாங்கள் செய்த சாதனைகளையெல்லாம் ஒன்றிய அரசின் உதவி இல்லாமலேயே சாதித்திருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் அவர்களின் நெருக்கடிகளை மீறி சாதித்திருக்கிறோம். மதுரை வந்த பிரதமர் நரேந்திர மோடி, மதுரவாயல் – துறைமுகம் மேம்பாலப் பணிகள் தாமதம் பற்றி குற்றஞ்சாட்டி பேசியிருக்கிறார். அவர் கூட்டணி வைத்திருக்கும் அதிமுக-தான் இந்த திட்டம் வரக் கூடாது என்று தடை செய்தார்கள். திமுக அரசு வந்து தான், ஒன்றிய அரசிடம் சொல்லி தற்போது பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பிரதமர் மோடிக்கு சொல்ல சாதனைகள் இல்லாததால், தேர்தல் நேரத்தில் பொய்யை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

இதைவிட பெரிய காமெடி என்னவென்றால், பழனிசாமி 'அதிமுக ஆட்சி அமைக்கும்' என்று சொல்கிறார். அவரை மேடையில் வைத்துக் கொண்டே, பிரதமர் நரேந்திர மோடி 'என்டிஏ ஆட்சி' அமையும் என்கிறார். யாருக்கு யார் தலைமை என்றே தெரியாமல் தான் இவர்கள் கூட்டணி இருக்கிறது.இதனால்தான்,இந்த தேர்தல் 'தமிழ்நாடு vs என்டிஏ' என்று தெளிவாக சொன்னேன். அப்போது சிலர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், மோடியும், மத்திய அமைச்சர் அமித் ஷாவும் தமிழ்நாட்டிற்கு வரும்போதெல்லாம் அதை உறுதிப்படுத்திகிறார்கள். தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்ற தேர்தலில் நிச்சயம் தமிழ்நாடு வெல்லும். திராவிட மாடல் 2.0-வில் எங்கள் Record-யை நாங்களே Beat செய்வோம்" என தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "திமுக கூட்டணி எண்ணிக்கையில் அமையப் பெற்ற கூட்டணி அல்ல. எண்ணத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி. தமிழ்நாட்டில் இந்த கூட்டணி தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்போதும் எங்கள் கூட்டணியில் இன்னும் பல கட்சிகள் இணைந்திருக்கின்றன. இன்னும் இணைய இருக்கின்றன. அதனால், இதை நான் சவாலாகக் கருதவில்லை. இதை கொள்கை கூட்டணியாக நாங்கள் கொண்டு செல்கிறோம்" என்றார்.

மதுரையில் பேசிய பிரதமர் மோடி திமுக மீண்டும் ஆட்சி அமைப்பது ஒரு கானல் நீராக இருக்கும் என்று சொல்லியிருந்தாரே என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "மோடியை பொறுத்தவரை, தமிழ்நாட்டில் பாஜக ஆட்சி அமைக்க வேண்டும் என்று தான் கனவு கண்டு கொண்டிருக்கிறார். அதுதான் கானல் நீராக சென்றுகொண்டிருக்கிறதே தவிர, அவர் சொல்வது போன்று இல்லை" என பதிலளித்தார்.

# “பொதுமக்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை!”

## இஸ்ரேல் பிரதமருக்கு மோடி வலியுறுத்தல்



மேற்கு ஆசிய பிராந்தியத்தின் தற்போதைய பதற்ற நிலைமை குறித்து விவாதிக்க பிரதமர் நரேந்திர மோடி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் உரையாடினார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் பிரதமர் மோடி தொலைபேசி வாயிலான தனது பேச்சின்போது, மேற்கு ஆசிய பிராந்தியத்தின் சமீபத்திய சூழல் குறித்த இந்தியாவின் கவலைகளைத் தெரிவித்தார். மேலும், பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தினேன். இந்த போரினை முன்கூட்டியே நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மீண்டும் வலியுறுத்தினேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானுடன் பேசினார். மேலும், வளைகுடா நாட்டின் மீதான ஈரானின் தாக்குதல்களைக் கண்டித்து, இந்த கடினமான காலங்களில் இந்தியா ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் ஒற்றுமையாக நிற்கிறது என்று கூறினார்.

இஸ்ரேலின் மத்திய நகரமானபெய்ட்ஷெமேஷில் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 1) ஈரானிய ஏவுகணைத்தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 11 பேர் காணாமல் போயுள்ளனர். இது போர் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலில் நடந்த மிகக்கொடிய தாக்குதலாகும். அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானுக்கு எதிராக தாக்குதல்களைத் தொடங்கின. இத்தாக்குதலில் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதனையடுத்து ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளித்து உலக அமைதியையும் நிலைத்தன்மை யையும் உறுதி செய்ய நாடுகளுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம். உலகம் முழுவதும் உருவாகும் பதற்றங்கள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் தெளிவாக இருந்துள்ளது. இந்தியா தொடர்ந்து அமைதி மற்றும் நிலைத்தன்மையை வலியுறுத்தி வருகிறது. இரண்டு ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அமைதிக்கான குரல் மேலும் வலிமைபெறும்" என தெரிவித்தார். மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் மோடி, "பிராந்தியத்தில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருகிறது. அங்குள்ள நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது". என தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய வான் தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். அந்நாட்டின் 40 முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து அரசியல் தலைமைகள், ராணுவத் தளபதிகள், ஆயுத கிடங்குகள் ஆகியவற்றை குறிவைத்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பதிலுக்கு, இஸ்ரேலுக்கு எதிராகவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இஸ்ரேலை தாக்கியதைத்தொடர்ந்து, லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

# லெபனான் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்: 31 பேர் உயிரிழப்பு



பெய்ரூட்: ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இஸ்ரேலைத் தாக்கியதைத் தொடர்ந்து, லெபனான் மீதான இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 31 பேர் கொல்லப்பட்டதாக லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானை குறிவைத்து அமெரிக்காவும் இஸ்ரேலும் வான்வழித் தாக்குதலை தொடங்கி நடத்தி வருகிறது. ஈரானும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்கதளங்களின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

மேற்கு ஆசியாவில் நடக்கும் மோதலின் இடையே ஹிஸ்புல்லா படைகள் இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் லெபனானின் பெய்ரூட்டில் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் 31 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 149 பேர் காயமடைந்ததாகவும் லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், குவைத் மீது ஈரான் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்துவதால், அமெரிக்கா அங்குள்ள அமெரிக்கர்கள் பாதுகாப்பாக வீட்டிற்குள் இருக்குமாறு அவசர எச்சரிக்கை விடுத்தது.

### ஈரானில் இதுவரை 555 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்தி வரும் வான்வழி தாக்குதல்களில் ஈரானில் இதுவரை 555 பேர் உயிரிழந்தனர்

ஈரானின் 'ரெட் க்ரெசன்ட் சொசைட்டி' (Red Crescent Society) திங்கள்கிழமை (மார்ச் 2, 2026) வெளியிட்ட அறிக்கையில், 'இஸ்லாமியக் குடியரசான ஈரானை இலக்காகக் கொண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் குறைந்தது 555 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை 131 நகரங்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரான் அணு நிலையங்கள் மீது தாக்குதல்?

ஈரானின் நடன்ஸ் யூரேனியம் செறிவூட்டும் நிலையத்தின் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியதாக ஐ.நா. அணு அமைப்பில் ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

ஐஏயுஏ (International Atomic Energy Agency) அமைப்பில் ஈரானின் தூதராக உள்ள ரெசா நஜாபி (Reza Najafi), "அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மேற்கொண்ட சட்டவிரோத மற்றும் கொடூரமான தாக்குதல்களை நான் கண்டிக்கிறேன்" என்று தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "ஈரானின் அமைதியான மற்றும் பாதுகாப்பான அணு நிலையங்களை அவர்கள் நேற்றும் தாக்கினர். ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க முயல்கிறது என்ற அவர்களின் கூற்று மிகப்பெரிய பொய்" என்று தெரிவித்தார். எனினும், அந்த இடத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலும் அமெரிக்காவும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்கள் காரணமாக ஈரானின் எந்த ஓர் அணு நிலையமும் சேதமடைந்ததாக தகவல் இல்லை என ஐஏஇஏ (IAEA) அமைப்பின் தலைவர் ரஃபேல் குரோஸி தெரிவித்துள்ளார்.

35 நாடுகள் அடங்கிய நிர்வாக சபையில் அவர் வெளியிட்ட அறிக்கையில், "எந்த அணு நிலையங்களும் சேதமடைந்ததாக அல்லது தாக்கப்பட்டதாக எங்களிடம் எந்தச் சான்றும் இல்லை" என்று அவர் தெரிவித்துள்ளார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி 14வது வார்டில் உற்சாகமாக கொண்டாடப்பட்டது.முன்னாள் திமுக நெசவாளர்அணிமாநகரதுணைஅமைப்பாளர்சக்திவேல்தலைமையில்,பொதுமக்களுக்கு இனிப்புகள்வழங்கிசிறப்பிக்கப்பட்டது.இந்நிகழ்வில்வட்டகழகச்செயலாளர்மாணிக்கம், அவைத்தலைவர் ராஜேந்திரன் மற்றும் வார்டு பிரதிநிதிகள் தென்னரசு, நாகமாணிக்கம் பங்கேற்றனர். மேலும் இஸ்மாயில், லோகு, நாகராஜ், பழனி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.



ஈரோடு மாநகர் பெருந்துறை சாலை செங்கோடம்பள்ளம் பகுதியில் உள்ள U R C பழனியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு புதாகோகோய் ஸ்போர்ட்ஸ் கராத்தே அகாடமி சார்பாக பெல்ட் தேர்வு நடைபெற்றது . இந்த நிகழ்வில் பெல்ட் தேர்வு முடிவில் மாணவ மாணவியர்களுக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் மாணவர்களுக்கு பெல்ட் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி மாணவர்களை பாராட்டினர்.

### சிவகங்கை மாவட்டத்தில் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

## பல்வேறு நலத்திட்டங்களை பொதுமக்களுக்கு ப. சிதம்பரம் எம்.பி. வழங்கினார்



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் கீழப்பூங்குடியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுசெயலாளர் பச்சேரி சி. ஆர்.சுந்தரராஜன் அவர்களின் சொந்த நிதியில் கட்டப்பட்ட பல்வேறு கட்டிடங்களை முன்னாள் மத்திய நிதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் ஆகியோர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை நகராட்சி 5வது வார்டு சுத்தாந்தா பாரதி தெருவில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட நியாயவிலைக்கடை கட்டிடத்தையும், காளையார்கோவில் ஒன்றியம் அல்லூர் ஊராட்சி அல்லூர் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ப. சிதம்பரம் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட நியாயவிலை க்கடை கட்டிடத்தையும், மானாமதுரை ஒன்றியம் கால்பிரவு ஊராட்சி, பீசர்பட்டிணம் விலக்கில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட நிழற்குடையையும், மானாமதுரை ஒன்றியம், சுள்ளங்குடி ஊராட்சி,கச்சாநத்தம் கிராமத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட நிழற்குடையையும் பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் திறந்து வைத்தார்.

தொடர்ச்சியாக சாக்கோட்டை ஒன்றியம் சிறுகப்பட்டி ஊராட்சி சிறுகப்பட்டி கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ப. சிதம்பரம் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட நியாயவிலைக்கடை கட்டிடத்தையும், சாக்கோட்டை ஒன்றியம் சிறுகப்பட்டி ஊராட்சி, ஆயினிமனை காதமரவார் காளியம்மன் கோவில் அருகில் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட கலையரங்கத்தையும், சாக்கோட்டை ஒன்றியம், செங்கத்தான்குடி ஊராட்சி, செங்கத்தான்குடி, முத்துமாரியம்மன் கோவில் அருகில் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட கலையரங்கத்தையும் குத்து விளக்கேற்றையும், ரிப்பன் வேட்டையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர் திறந்து வைத்தார். பின்னர் காரைக்குடி மாநகராட்சி காங்கிரஸ் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மற்றும் வார்டு தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்என்பது குறிப்பிட த்தக்கது.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி, மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி, நகரத் தலைவர் புருஷோத்த மன், உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை அலுவலர்கள், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இந்தியா கூட்டணி கட்சியின் மாநில,மண்டல, மாவட்ட, மாநகர, வட்டார, ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சி மற்றும் கிளைகளை சேர்ந்த கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்.



தமிழக சட்டமன்றத் தேர்தல் களம் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், ஈரோடு மாவட்ட அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் முக்கிய நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது. ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித்துறைஅமைச்சருமானசு.முத்துசாமிஅவர்கள்,வரும்2026சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு மேற்கு மற்றும் ஈரோடு கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளிலும் போட்டியிட வேண்டும் என வலியுறுத்தி திமுக பகுதிச் செயலாளர்கள் ஒன்றிணைந்து விருப்பமனு தாக்கல் செய்துள்ளனர். ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிச் செயலாளர்களான வி.சி.நடராஜன், கோட்டை பொ.இராமச்சந்திரன், குறிஞ்சி என். தண்டபாணி, குமாரவடிவேல், வில்லரசம்பட்டி முருகேசன், அக்னி சந்திரசேகர் மற்றும் லட்சுமணக்குமார் ஆகிய ஏழு பேரும் ஒருமித்த கருத்துடன் இந்த விருப்பமனுவை அளித்துள்ளனர். அமைச்சரின் சீரிய நிர்வாகத்தாலும், மக்கள் நலத்திட்டங்களாலும் ஈரோடு மாநகரப் பகுதிகள் பெரும் வளர்ச்சி கண்டுள்ளதால், அவர் மீண்டும் இந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது வெற்றியை உறுதி செய்யும் என நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். தங்களது மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதமாக பகுதிச் செயலாளர்கள் அனைவரும் திரண்டு வந்து விருப்பமனு தாக்கல் செய்தது திமுக வட்டாரத்தில் பெரும் எழுச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வருகையை கொண்டாடும் வகையில், திமுக நிர்வாகிகள் போடிநாயக்கனூர் அரண் மனை முன்பாக மேள தாளங்களுடன் வரவேற்பு அளித்தனர். ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததை கொண்டாடும் வகையில், இந்த வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்ற திமுக தொண்டர்கள் ஓ.பன்னீர்செல்வத்தை வரவேற்று, இனிப்பு வழங்கி, வானவேடிக்கை நடத்தி, கோஷங்கள் எழுப்பினர். தேனி பாராளுமன்ற உறுப்பினர் தேனி திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில், போடி நகர செயலாளர் புருஷோத்தமன் முன்னிலையில், போடி திமுக மாண வரணி அமைப்பாளர் முத்துப்பாண்டி ஏலக்காய் மாலை அணிவித்து வரவேற்றார். திமுக கட்சி நிர்வாகிகளும் உறுப்பினர்களும் தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## மாப்பிள்ளையூரணியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் 73வது பிறந்தநாள் விழா பிரம்மாண்டமான கேக் வெட்டி கொண்டாட்டம்



தூத்துக்குடி கிழக்கு ஒன்றியம் மற்றும் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் சார்பில் மாப்பிள்ளையூரணியில் பகுதி யில் முன்னாள் ஊராட்சி தலைவர் சரவணன் தலைமையில் கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கேக் வெட்டி கொண்டாடினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் டி.டி.சி. ராஜேந்திரன், மாவட்ட தொழிலாளரணி அணி துணை அமைப்பாளர் அந்தோணிதனுஷ்பாலன், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், பிளோ மின்ராஜ் முன்னிலைவகித்தனர்.நிகழ்ச்சியில் மாவட்ட கிளைச் செயலாளர்கள் ஒன்றிய கிளை நிர்வாகி கள் மற்றும் கழக தொண்டர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே மின்னல் சித்தாமூர், கொங்கரை மாம்பட்டு. களத்தூர், ஊராட்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் சார்பில். மின்னல் சித்தாமூர் கொங்கரை மாம்பட்டு. களத்தூர், ஊராட்சியில் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி. கே.கண்ணன் தலைமையில் பிறந்தநாள் கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்பு பிஸ்கட் பள்ளி சிறுவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் பேனா பென்சில் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் ஆதி திராவிட நலக்குழு மாவட்ட அமைப்பாளர் ஜி.சிவகுமார், மின்னல் சித்தாமூர் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் பாலாஜி, அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பிரகாஷ். ஒன்றிய துணைச் செயலாளர் விஜியா. கீழ்ப்பட்டு கிளை செயலாளர்கள் துரை, மணி, வேலாயுதம். கிளை பிரதிநிதி ராஜன். மற்றும் நிர்வாகிகள் தவமணி ஆறுமுகம். தனசேகர். வேலு, சண்முகம், கொங்கரை மாம்பட்டு. ஒன்றிய துணை அமைப்பாளர் சுரேஷ்குமார். கிளை செயலாளர் ஏழுமலை. கிளை நிர்வாகிகள் அமுதா. சந்திரசேகர். சண்முகம். லட்சுமணன். களத்தூர் கிளை செயலாளர் விநாயகம். விவசாய அணி ஒன்றிய துணை அமைப்பாளர் சுரேஷ். கிளை இளைஞரணி செயலாளர் சுரேஷ். ஒன்றிய இளைஞரணி சிவா. மகளிர் அணி செயலாளர் பிரியா. உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

## கடையநல்லூரில் விஸ்டம் மெட்ரிக் பள்ளியில் விஸ்டோ சுற்று சூழல் பாதுகாப்பு இயக்கம் துவக்க விழா

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் விஸ்டம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விஸ்டோ சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் துவக்க விழா நடைபெற்றது.இவ்விழாவிற்கு பள்ளியின் தாளாளர்



ஜெய்லானி தலைமை தாங்கினார். பள்ளியின் அறங்காவலர்கள் முன்னிலை வகித்தார்கள். முதன்மை முதல்வர் அப்துல் கனி வரவேற்றார்.

கடையநல்லூர் வனச்சரக அலுவலர் முனைவர் கனகராஜ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பள்ளிவளாகத்தில்மரக்கன்றுநட்டுவைத்துபல்லுயிர் வளம் பேணி சுற்று சூழலை பாதுகாக்க மாணவர்கள் முன்வரவேண்டும்என்றுபேசிமன்றஇலட்சினையை வெளியிட்டார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் சுரேஷ் குமார் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டுகோள் விடுத்தார்.தமிழ்நாடு

மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உதவிப் பொறியாளர் தமிழ்செல்வன் இருப்பது ஒரு பூமி, அது எல்லோருக்குமானது . அதைக் காப்பது நம் கடமை என்று எடுத்துக் கூறி மாணவர்களுக்கு மீண்டும் மஞ்சப்பை வழங்கி நெகிழி பயன்பாட்டினை தவிர்க்க வேண்டுகோள் விடுத்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்ககடையநல்லூர்ஒன்றியதலைவர்சேக்உசேன் தென்காசிலைஃப்நிறுவனர்ஜஸ்டின்துரைஆகியோர் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசு வழங்கி வாழ்த்தினார்கள். . 'WISDO ECO FORUM' அமைப்பின் ஒருங்கி ணைப்பாளராக ஏழாம் வகுப்பு மாணவர் ரோஷன் மசூது, தேர்வு செய்யப்பட்டார். இந்தஅமைப்பின்நோக்கம்குறித்துமாணவிஹைரூன் உரையாற்றினார். இயற்கை வளங்களை பாதுகாத்து மாசு குறைத்து சுற்று சூழலை பாதுகாக்கும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்த Eco Forum உடனடியாக 100 மரக்கன்றுகளை நட்டு 'Missi on Green Tenkasi' என்ற திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவது என உறுதி ஏற்றனர். விழாவில் வனவர் அஸ்வின் , ஆசிரியர்கள், மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் பால்ராஜ் , கற்பகவல்லி , உமா ஆகியோர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள பட்டாடைகட்டி பஞ்சாயத்து உட்பட்ட வென்றிலிங்கபுரம் கிராமத்தில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் தளபதி மற்றும் பொதுச் செயலாளர் உத்தரவின்படி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன், மேல நீலிதநல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சதீஷ்குமார், கிளைச் செயலாளர் அசோக் ராஜா மற்றும் மாவட்ட, நகர கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் பறக்கை அரசு நடுநிலைப்பள்ளியில் PTS பள்ளிக்கூட அரங்கம் திறப்பு விழா நாளை காலை நடைபெற உள்ளது. இதன் இறுதி கட்டப் பணிகளை தென்குமரி கல்விக்கழக செயலாளர் டாக்டர் பி.டி.செல்வகுமார் பார்வையிட்டார். அருகில் பள்ளி தலைமை ஆசிரியை A.T.பிரீடா ஹெரன், ஆசிரியர்கள் J.ஜெகன் பிரபு, R.S.கணேசன் ஆகியோர் உள்ளனர்.



மதுராந்தகம் மார்ச்.03 செங்கல்பட்டு மாவட்டம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு மதுராந்தகம் நகராட்சிக்கு உட்பட்ட மோச்சேரி பகுதியில் மதுராந்தகம் நகர மன்ற துணைத் தலைவர் சிவலிங்கம். கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் பிரியாணி வழங்கினார் இதில் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.03.2026) ஆர்.என். புதூர், செவித்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவன் கௌசிக் மஹாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான (செவித்திறன் குறையுடையோர்க்கான பிரிவு) சதுரங்க போட்டியில் தேசிய அளவில் மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்றதைத்தொடர்ந்து தான் பெற்ற பரிசு மற்றும் கேடயத்தினை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி ஆகியோர் உள்ளனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 2000பேருக்கு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்: 2021ல் முதலமைச்சராக ஸ்டாலின் பொறுப்பேற்ற காலம் கொரானா காலக்கட்டம் அதற்கு முந்தைய அதிமுக ஆட்சியில் வீட்டுக்குள் முடங்கி இருங்கள் என்று கூறி அனைத்து தொழில் வணிகநிறுவனங்கள் முழுமையாக மூடப்பட்டு முடக்கி போட்டிருந்தார்கள்.அதையெல்லாம்மீட்டெடுக்கும் வகையில் ஆக்ஜிஸன் தட்டுபாடு அதை ரயில்கள்மூலம் வரவைத்து அங்கிருந்து ஒவ்வொரு மருத்துவமனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டு பலர் உயிர்கள் பாதுகாக்கப்பட்டது. அந்த சமயத்தில் கொரானா பாதிக்கப்பட்ட பலரையும் தங்களது குடும்ப உறுப்பினர்கள் கூட பார்ப்பதற்கு வரவில்லை. ஒரு சிலர் இறந்தனர். அவர்களுக்குரிய பல வழிமுறைகளை திமுக அரசு மட்டுமின்றி இந்த தொகுதியில் நான் பல்வேறு உதவிகளை செய்தேன்.தனியார் மருத்துவமனையில் யாரையுமே அனுமதிப்பதில்லை திருமண மண்டபங்கள் எல்லாம் மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு பிறகு தடுப்புசி மூலம் பொதுமக்களை பாதுக்காக்கப்பட்டு முகக்கவசம் அணியுங்கள் என்று கூறி எல்லாப்பகுதிகளிலும் கிருமிநாசினி உபயோகப்படுத்தப்பட்டு இயல்பு வாழக்கையை முதலமைச்சர் எல்லோருக்கும் உருவாக்கி கொடுத்து அப்போது ஆரம்பிக்கப்பட்ட மக்கள் நலப்பணிகள் இப்போது வரை 5 ஆண்டுகாலம் தொடர்ந்து நாட்டுமக்கள் தமிழர்கள் நலன் என்று ஞாயிற்றுகிழமைகளிலும் தலைமை செயலகத்திற்கு சென்று நம்முடைய முதலமைச்சர் தளபதியார் நமக்காக பணியாற்றுகிறார்.

மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் மருத்துவர்கள் நம்முடைய இல்லத்திற்கே வந்து முதியவர்களின் நோய்களை நம்முடைய குழந்தைகள் பார்க்க மறுத்தாலும் அவர்கள் பார்க்கிறார்கள்.அந்ததிட்டம்தமிழகத்தில் சிறப்பாக நடைபெறுகிறது என்று ஒன்றிய அரசே விருது வழங்கியுள்ளது. காலைஉணவு திட்டத்தின் மூலம் மாணாக்கர்கள் நன்மையடைந்து வருகின்றனர். பொங்கலுக்கு ரூ3000 வழங்கப்பட்டுள்ளது. மகளிர் உரிமைத்தொகை 1 கோடியே 31 லட்சம் குடும்பத்திற்கு வழங்குவதை சூழ்ச்சிசெய்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடுக்க நினைத்தை முறியடித்து முதலமைச்சர் ரூ 5000 வழங்கியுள்ளார் இதன்மூலம் பெண்களுக்கு சேமிப்பு உயர்ந்துள்ளது. திருவிழா காலங்களில் யாரையும் எதிர்பார்க்காமல் செலவு செய்து கொள்கின்றனர்.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. 110 கோடி மதிப்பில் பெண்களுக்கு மகப்பேறு உள்பட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கும்வகையில் புதிய மருத்துவமனை திறக்கப்படவுள்ளது. எல்லா தரப்பினருக்கும் நன்மையடையும் வகையில் இந்த ஆட்சியில் எம்.பி சிட் பட்டியலில் அறிவிக்கப்பட்டபடி பல நன்மையடைந்து வருகின்றன இந்த பகுதி சுடலை காலனி உள்ளிட்ட பகுதியில் உள்ள மக்களுக்கு அதிமுக ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கணினி பட்டா திமுக ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நான்காயிரம் கோவில்களுக்கு திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. பூசாரிகளுக்கு நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் நலனிலும்அக்கறைகொண்டு பணியாற்றும் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு அனைவரும் துணைநிற்க வேண்டும். வரும் தேர்தலில் முதலமைச்சர் மீண்டும் ஆட்சியில் அமருவதற்கு பாடுபட வேண்டும். என்று பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தர், வட்டச்செயலாளர் சிங்கராஜ், பெருமாள் கோவில் அறங்காவலர் குழுதலைவர் செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதாதேவி, மாநகர வழக்கறிஞர் அணிதுணைஅமைப்பாளர்கள் ரூபராஜா, ரெக்ஸ், கவுன்சிலர் சரவணக்குமார் வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், துரை, மற்றும் மணி உள்படபலர் கலந்து கொண்டனர்

## சென்னை வாடிக்கையாளர் நெட்வொர்க்கிங் கூட்டத்தில்

## இஜி & இகியூ தொடருடன் ஒருங்கிணைந்த எல்ஜி டிமாண்ட் மேட்ச் தொழில்நுட்பத்தை எல்ஜி அறிமுகப்படுத்தி விளக்கக் காட்சியளித்தது




உலகின் முன்னணி ஏர் கம்பிரஸர் உற்பத்தியாளர்களில் ஒன்றான எல்ஜி எக்யூப்மென்ட்ஸ் நிறுவனம் மதுரையில் நடைபெற்ற வாடிக்கையாளர் நெட்வொர்க்கிங் கூட்டத்தில், மாறிக்கொண்டிருக்கும் காற்றுத் தேவைகளின் சூழலில் நிலையான வேகக் கம்பிரஸர்கள் இயங்கும் விதத்தை மேம்படுத்தும் டிமான்ட்மேட்ஜ்தொழில்நுட்பத்தை காட்சிப்படுத்தியது. எல்ஜி EG மற்றும் EQ தொடர் ஏர் கம்பிரஸர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு,கம்பிரஸர் உள்புற காற்றோட்டத்தை நுண்ணறிவுடன் மீளச் சுழற்றி தொழிற்சாலையின் உடனடி தேவைக்கேற்ப காற்று விநியோகத்தை தானாகச் சீரமைக்கிறது. இதன் மூலம், நிலையான வேகக் கம்பிரஸர்களின் எளிமை மற்றும் வலிமையுடன், VFD-க்கு இணையான ஆற்றல் சேமிப்பு கிடைக்கிறது.

பெரும்பாலான தொழிற்சாலைகள் fixed-speed கம்பிரஸர்களை பயன்படுத்துகின்றன. தேவைகள் குறையும்போதும் அவை ஒரே மாதிரியான உற்பத்தியையே தொடர்ந்து வழங்குகின்றன. எல்ஜி Demand=Match அமைப்பு இவ்வகை இயந்திரங்களுக்கு நுண்ணறிவை அளிக்கிறது - உடனடி தேவைக்கேற்ப விநியோகத்தை தானாகச் சீரமைத்து, வாடிக்கையாளர்கள் மின்சாரச் செலவைக் குறைக்கவும், இயந்திரப் பகுதிகளில் ஏற்படும் தேய்மானத்தை குறைக்கவும், uptime-ஐ மேம்படுத்தவும் உதவுகிறது.என்று எல்ஜி எக்யூப்மென்ட்ஸ் லிமிடெட் இந்தியாவின் சேனல் சேல்ஸ் தலைவர் காசி பி.எல், தெரிவித்தார்

சிக்கல்: நிலையான உற்பத்தி Vs மாறும் தேவை

பெரும்பாலான தொழிற்சாலைகளில், கம்பிரஸ் செய்யப்பட்ட காற்றுத் தேவைகள் நிமிடம் தோறும், பணி முறை தோறும் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஆனால் நிலையான வேகக் கம்பிரஸர்கள், கட் -இன் மற்றும் கட் -அவுட் அழுத்த எல்லைகளுக்கு இடையில் சுழற்சி செய்வதன் மூலம் மட்டுமே பதிலளிக்கின்றன. இதன் விளைவாக:

வாடிக்கையாளர்களுக்கான முக்கிய நன்மைகள்


- மின்சாரச் சேமிப்பு: அதிகபட்சம் 17% வரை ஆற்றல் குறைவு

நம்பகத்தன்மை: குறைந்த cut-in / cut-out சுழற்சிகள் மூலம் மெக்கானிக்கல் அழுத்தமும் இயந்திரப் பகுதிகளில் ஏற்படும் தேய்மானம் குறைகிறது

- செலவு திறன்: பெரிய முதலீடு இன்றியே (capital-light) திறன் உயர்வு; இயந்திரத்தை "lifetime young" ஆக வைத்திருக்க உதவும்

Demand=Match அமைப்பு, வாடிக்கையாளர்களின் மொத்த சொத்து உடைமைச் செலவை (Total Cost of Ownership) குறைக்கும் வகையில் வேறுபட்ட, மதிப்பு சார்ந்த தீர்வுகளை வழங்கும் ELGi-யின் நீண்டகால வணிகத் திட்டத்துக்கு ஆதரவளிக்கிறது. திறன்தன்மையை எளிமையாகவும் மலிவாகவும் ஆக்குவதன் மூலம், பொதுப் பொறியியல், உணவு செயலாக்கம், அரிசி & பருப்பு சீரமைப்பு, நூற்பாலை உள்ளிட்ட துறைகளுடன், வாகன உற்பத்தி மற்றும் மின்னணுவியல் போன்ற துறைகளிலும் விரைவான தழுவலை ELGi ஊக்குவிக்கிறது.

கிடைக்கும் நிலை: ELGi Demand=Match தற்போது EG மற்றும் EQ தொடர் கம்பிரஸர்களில் தொழிற்சாலையிலேயே முன்பாக பொருத்தப்பட்ட (factory-fit) வகையில் கிடைக்கிறது. மேலும் தகவல்களுக்கு, உங்கள் அருகிலுள்ள ELGi பிரதிநிதியை தொடர்பு கொள்ளவும்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் 88 தேர்வு மையங்களில் 256 பள்ளிகளை சேர்ந்த 22033 மாணவ மாணவியர்கள் பிளஸ் 2 தேர்வு எழுதுகின்றனர் இந்த பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேலும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் பறக்கும் படைகள் அமைக்க பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் 88 தேர்வு மையங்களில் 256 பள்ளிகளை சேர்ந்த 22033 மாணவ மாணவியர்கள் பிளஸ் 2 தேர்வு எழுதுகின்றனர் இந்த பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேலும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் பறக்கும் படைகள் அமைக்க பட்டுள்ளன.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் குடும்ப வறுமை காரணமாக கல்லூரியில் படித்து கொண்டே இரவு வனிக நிறுவனங்களில் பணிக்கு சென்று விட்டு வீடு திரும்ப கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக நின்ற மாணவர் அமல் ஜோபின் கையில் இருந்த செல்போனை பேருந்து நிலையத்தில் அங்கு பணியில் இருந்த போலிசார் அடித்து உதைத்தும் மாணவரையும் அவரது தாயாரையும் மிரட்டிய சம்பவம் பெரும் பரப்புப்பை ஏற்படுத்தி உள்ளது இதுகுறித்து பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்டாலின் அவர்களிடம் புகார் மனு.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தாட்கோ சார்பில் ஒரு நபருக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய வாகனம் வாங்கப்பட்டதற்கான சாவியினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.

## முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா

## திமுக துடியலூர் 2 வது வட்டம் கிழக்கு பகுதி சார்பில் கொண்டாடினர்

கோவை துடியலூர் அரவான் கோவில் திடல் பகுதியில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை ஒட்டி திமுக 2 வது வட்டம் துடியலூர் கிழக்கு பகுதி சார்பில் பட்டாசு வெடித்தும், கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கியும் சிறப்பாக கொண்டாடினர். மேலும் தமிழக முதல்வர் மு க



ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறி ஒவ்வொரு வீடுகளிலும் கோலங்களை வரைந்திருந்தனர். அவைகளைபார்வையிட்டுசிறந்தகோலங்களுக்கான பரிசு கூப்பன்களை வழங்கினர்.

திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு க ஸ்டாலினின் 73 வது பிறந்தநாளை திமுகவினர் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வெகு விமர்சையாக கொண்டாடிவருகின்றனர்.

இதன் ஒருபகுதியாகதிமுக2வது வட்டம்துடியலூர் கிழக்கு பகுதி சார்பில் கோவை துடியலூர் அரவான் கோவில் திடல் பகுதியில் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

2 வது வட்டக் கழக செயலாளர் தமிழ் நிதி மற்றும் 2 வது அ வட்டக் கழக செயலாளர் சிடிசி ராஜா ஆகியோரது ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு துடியலூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் அருள்குமார் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பட்டாசு வெடித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து மு க ஸ்டாலின் உருவம் பொறித்த கேக் வெட்டி அதனை குழந்தைகளுக்கும், நிர்வாகிகளுக்கு ஊட்டினர். மேலும் பொதுமக்களுக்கும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அணி நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், பி எல் ஏ 2, பி எல் சி நிர்வாகிகள், பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

தொடந்து துடியலூர் முத்துநகர், புது முத்து நகர் பகுதியில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறியும், ஸ்டாலினின் உருவத்தை வரைந்தும் ஒவ்வொரு வீடுகளிலும் கோலங்களை வரைந்திருந்தனர். அவைகளை பார்வையிட்டு சிறந்த கோலங்களுக்கான பரிசு கூப்பன்களை வழங்கினர்.

## சின்னவேடம்பட்டி பகுதியில் திமுகவில் இருந்து

## பி.ஆர்.ஜி.அருண்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் 300க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்



கோவை சின்னவேடம்பட்டி பகுதியில் அதிமுக சார்பாக தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு வந்தவர்களை பகுதி கழக செயலாளர் மாரிச்சாமி வரவேற்றுப் பேசினார். கோவை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் விக்னேஷ் சுப்பையன் முன்னிலை வகித்துப் பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் பேசும்போது அத்திக்கடவு கூட்டுக்கு டிநீர் திட்டம் ஒன்று எம் ஜி ஆர் ஆட்சியிலும், திட்டம் இரண்டு ஜெயலலிதா ஆட்சியிலும், திட்டம் மூன்று எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியிலும் கொண்டுவரப்பட்டதாகவும், கோவையில் கட்டப்பட்டுள்ள அனைத்து மேம்பாளங்களும் அதிமுக ஆட்சிகாலத்தில் கட்டப்பட்டவை என தெரிவித்தார்.

இவ்விழாவில் திமுகவில் இருந்து 200க்கும் மேற்பட்ட பெண்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் முன்னாள் திமுக நிர்வாகி எஸ் ஆர் கந்தசாமி தலைமையில் கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் முன்னிலையில் அஇஅதிமுகவில் தங்களை இணைத்துக்கொண்டனர். அதிமுகவில் இணைந்த அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் கட்சித் துண்டு அணிவித்தும், நலத்திடங்களை வழங்கியும் கட்சியில் இணைத்துக்கொண்டார்.

கட்சியில் இணைந்த முன்னாள் திமுக நிர்வாகி கந்தசாமி பேசும்போது திமுக உரிய மரியாதை இல்லை என்றும், கடன்கள் மட்டுமே வாங்குகின்றனர். மக்களுக்குநலத்திட்டங்களை செய்வதில்லை அதனால் திமுகவில்இருந்துவிலகி அதிமுகவில் 300 க்கும் மேற்பட்டோருடன் இணைவதாக தெரிவித்தார். முன்னதாக நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எம் ஜி ஆர், ஜெயலலிதா ஆகியோரது திரு உருவப்படங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் மலர்கள் தூவி மரியாதை செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர்கள் சுரேஷ், மாரப்பன், காளிச்சாமி, ஜெயக்குமார், ஐ டி விங் மணிகண்டன், குணசேகரன், கிருஷ்ணவேணி உள்பட கட்சி நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற

## தூய்மை பணியாளர்களுக்கு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்




ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (02.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் தூ ய்மை பணியாளர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பசுமை திட்டத்தின் கீழ் வீடுகள், உயர்கல்விக்கான கடனுதவி, தொழில் புரிய மானியத்துடன் கடனுதவிகள், சம்பள உயர்வு, உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய 18 மனுக்களை தூய்மை பணியாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுக்களை தொடர்புடைய துறைஅலுவலர்களுக்கு வழங்கி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

மேலும், தூய்மை பணியாளர்களுக்கு நல வாரியத்தின் சார்பில் விபத்துக் காப்பீட்டுத்திட்டம், பணி இடத்தில் விபத்து உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை,முதியோர் ஓய்வூதியம், திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை,கண்கண்ணாடி உதவித்தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதற்கு தகுதியாக தூய்மை பணியாளர் நலவாரியத்தில் பதிவு பெற்றிருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் தேவைப்படும் ஆவணங்களை இணைத்து வழங்கி பதிவு பெற்று பயன்பெறலாம்.

இக்கூட்டத்தில், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் நைல் அ.ராஜா நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு
# தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த 14 குழந்தைகளுக்கு அமைச்சர் கீதாஜீவன் தங்க மோதிரங்கள் அணிவித்தார்



தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் 73வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநிலம் முழுவதும் திமுகவினரால் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதையடுத்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 14குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்தார். மாவட்ட தி.மு.க. செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் தலைமை தாங்கி 14 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் அணிவித்து, பெற்றோருக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார்.

இந் நிகழ்ச்சியில் உறைவிட மருத்துவர் சைலஸ்ஜெபமணி,மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொதுக்குழு உறுப்பினர் கஸ்தூரிதங்கம்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா தேவி, மாவட்டதகவல்தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அபிராமிநாதன், மருத்துவர் அணி தலைவர் அருண்குமார், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரவி, அரசு வழக்கறிஞர் ஆனந்த் காபிரியேல், பெருமாள் கோயில் அறங்காவலர் குழு தலைவர்செந்தில்குமார், ஐடி விங் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் அந்தோணி கண்ணன், அருணா தேவி, தொகுதி ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர்கள் விஜயலட்சுமி, இசக்கி ராஜா, விஜயகுமார் சரவணகுமார், ஆறுமுகம், வட்டச் செயலாளர்கள் பாலகுருசாமி, சிங்கராஜ், செல்வராஜ், செந்தில்குமார், ஹான்ஸ், மாநகர மாணவரணி அமைப்பாளர் கோகுல்நாத், துணை அமைப்பாளர் சத்யா, சிறுபான்மை அணி மாவட்டதுணைஅமைப்பாளர் நிக்கோலாஸ் மணி, வழக்கறிஞர்கள் நாகராஜன் பாபு, ரூபராஜா, சுற்றுச்சூழல் அணி மகேஸ்வரன் சிங், பரமசிவன் மற்ற பிரதிநிதிகள் பாஸ்கர், துரை, புஷ்பராஜ், செல்வம் மற்றும் செவிலியர் கண்காணிப்பாளர், செவிலியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு. க .ஸ்டாலின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக சூரம்பட்டி, அணை கட்டு பளையபாளையம் அரசு ஆரம்ப பள்ளி, மற்றும் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஸ்கூல் பேக் ,மற்றும் நோட் புக் , டிபன்பாக்ஸ் ஆகியவற்றை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர்வி.சி.சந்திரகுமார்,மாவட்டகழகதுணைசெயலாளர்ஆ.செந்தில்குமார்,மாநகரக் கழக செயலாளர் மு. சுப்ரமணியம்,மண்டல தலைவர்கள் தண்டபாணி, சசிகுமார், பகுதி கழக செயலாளர்கள் அக்னி சந்துரு, வி.சி நடராஜன், முருகேசன், 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் புனிதா சுரேஸ் ,வட்ட கழக செயலாளர் பூபதி மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை புறநகர் வடக்கு மாவட்ட அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்சார்பில்தமிழக முன்னாள் முதல்வர்கள்எம்ஜி ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு கவுண்டம்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் விளையாட்டு உபரகரணங்கள் வழங்கும் விழா நரசிம்மநாயக்கன்பாளையம் அருகே நடைபெற்றது. இந்நிகழ்வில் 100 க்கும் மேற்பட்ட கிரிக்கெட் அணியினருக்கு விளையாட்டு உபகரணங்களை கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி ஆர் ஜி அருண்குமார் மற்றும் மாணவர் அணி மாநிலச் செயலாளர் சிங்கை ஜி ராமச்சந்திரன் ஆகியோர் வழங்கினர்.



## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி
# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (02.03.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 258 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரியதுறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தர விட்டார்.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தாட்கோ சார்பில், 1 நபர்க்கு முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் வளர்ச்சித் (CM ARISE) திட்டத்தின் கீழ் ரூ.9.46 இலட்சம் மதிப்பில் ரூ.3.31 இலட்சம் மானிய தொகையில் சுற்றுலா வாகனம் வாங்கப்பட்டதற்கான சாவியினை வழங்கினார்.

தொடர்ந்து, ஆர்.என். புதூர், செவித்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளியில் 11-ம் வகுப்பு பயிலும் மாணவன் கௌசிக், மஹாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான (செவித்திறன் குறையுடையோர்) சதுரங்க போட்டியில் தேசிய அளவில் மூன்றாம் இடத்தில் வெற்றி பெற்றதைதொடர்ந்து,மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் தான் பெற்ற பரிசு மற்றும் கேடயத்தினை காண்பித்து வாழ்த்துகளை பெற்றார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல், மாற்றுத்திறனாளி நல அலுவலர் பூபதி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ள 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழக அரசியல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, ஈரோடு கிழக்கு தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட கட்சியினரிடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில், ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்டத் தலைவரான நைல் அ.ராஜா, இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் தனது விருப்பமனுவைத் தாக்கல் செய்தார். கட்சியின் பல்வேறு பொறுப்புகளில் நீண்டகாலமாகப் பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர், தொகுதி மக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் எஜூகொன்வியா 2026 எனும் தலைப்பில்
# அகில இந்திய உயர்தர கல்வி ஆலோசகர்கள் மாநாடு மற்றும் கல்விக்கண்காட்சி
### பல்வேறு நாடுகளை சேர்ந்த கல்வியாளர்கள் பங்கேற்றனர்

பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்ட ஐஸீ குழுமக் கல்வி நிறுவனங்கள், ஃப்யூச்சர் கேர் குழுமத்துடன் இணைந்து, "எஜூகான்வியா 2026" எனும் தலை ப்பில், அகில இந்திய உயர்தர கல்வி ஆலோசகர்கள் மாநாடு மற்றும் கல்விக் கண்காட்சியை கோவை அமிர்தா பல்கலைக்கழகம் அருகே உள்ள, ஹார்மனி சம்மிட் மாநாட்டு மையத்தில் நடத்தியது. இதில், நாடு முழுவதிலும் இருந்து முன்னணி கல்வி ஆலோசகர்கள், கல்வித் தலைவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டின் வாயிலாக, உருவெடுத்து வரும் கல்வி வாய்ப்புகள், சர்வதேச கல்வி கூட்டா ண்மைகள் மற்றும் உயர்கல்வித் துறையின் மாற்றமடைந்து வரும் போக்குகள் குறித்து விவாதிக்கப்பட்டு, கருத்துகளை பகிர்ந்து கொள்ள ஒரு மேடையாக அமைந்தது. இதில், சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்ட கார்லிட்டோ நூன்ஸ்குத்துவிளக்கேற்றி வைத்து, மாநாட்டை துவக்கி வைத்தார். தொடர்ந்து கல்வியாளர்கள் மத்தியில் அவர் கூறியதாவது.. சர்வதேச கல்வி



ஒத்துழைப்புகளும் மாணவர் பரிமாற்றத் திட்டங்களும் உலகளாவிய கல்வி சூழலை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது என்றார். தொடர்ந்து பேசிய

ஃப்யூச்சர் கேர் குழுமத்தின் நிறுவனரும், நிர்வாக இயக்குநரான மனோஜ் மனயத்தோடி கூறியதாவது.. மாணவர்கள் தரமான உலகளாவிய கல்வி வாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்க கல்வி நிறுவனங்களும் கல்வி ஆலோசகர்களும் இடையிலான திட்டமிட்ட ஒத்துழைப்பின் அவசியத்தை தெளிவாககூறினார்.இந்த நிகழ்ச்சியில்

சூரத்தைச் சேர்ந்த பி.பி. சவானி பல்கலைக்கழகத்தின் இயக்குநர் ஸ்நேஹ் சவானி,

ஐஸீ குழுமக் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தைச் சேர்ந்த பேராசிரியர் முரளி கிருஷ்ணா, டாக்டர் சஹீஷ் மொய்தீன் மற்றும் விம்னேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி
# மேல்நிலை இரண்டாமாண்டு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு (Arrear) பொதுத்தேர்வு நடைபெறுவதை, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் காமராஜர் மேல்நிலைப்பள்ளி மற்றும் கலைமகள் கல்வி நிலையத்திலும் நேற்று (02.03.2026) மேல்நிலை இரண்டாமாண்டுமற்றும்மேல்நிலைமுதலாமாண்டு (Arrear) பொதுத் தேர்வு நடைபெறுவதை, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டத்தில் 12ம் வகுப்பு அரசு பொது



தேர்வு நேற்று (02.03.2026) துவங்கி 26.03.2026 வரையிலும் மற்றும் மேல்நிலை முதலாமாண்டு (Arrear)நேற்று(02.03.2026)துவங்கி27.03.2026வரையிலும் நடைபெறுகிறது. இத்தேர்வினை 223 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ,மாணவிகள் எழுதுகின்றனர். இதில் மேல்நிலை இரண்டாமாண்டு பயிலும் 10,976 மாணவர்களும் 12,331 மாணவிகளும் என மொத்தம், 23,307 மாணவ, மாணவியர்கள் எழுதுகின்றனர். மேலும், மேல்நிலை முதலாமாண்டு (Arrear) 139 மாணவர்களும், 97 மாணவிகள் என மொத்தம் 236 பேரும்எழுதுகின்றனர்.12-ம்வகுப்புபொதுத்தேர்வில் 669 தனித்தேர்வர்களும், 417 சலுகைகள் பெற்று தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களும் தேர்வு எழுதியுள்ளனர்.

இத்தேர்விற்கு 109 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 7 தனித்தேர்வு மையங்களும், 4 வினாத்தாள் சேகரிப்பு மையங்களும் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்விற்கு மாணவ, மாணவியர்கள் செல்லும் வகையில் 6 மலைப்பகுதி வழித்தடம் உட்பட 27 வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 4 விடைத்தாள் சேகரிப்பு மைங்களும், 3 விடைத்தாள் திருத்தும் மையங்களும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தேர்விற்கு 109 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 114 துறை அலுவலர்களும் மற்றும் 177 பறக்கும் படை அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

12ம் வகுப்பு மற்றும் 11ம் வகுப்பு (Arrear) அரசு பொது தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, போக்குவரத்து வசதி, தடையில்லா மின்சார வசதி, மருத்துவ வசதி மற்றும் காவல்துறை சார்பில் உரிய பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.மான்விழி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## மதுராந்தகத்தில்
# மீனாட்சி பிரியா ராகவனுக்கு விநாயகா நாட்டியாலயா சார்பாக சலங்கை பூஜை



செங்கல்பட்டு மாவட்டம் விநாயகா நாட்டியாலயா நிறுவனர் டாக்டர் மீனாட்சி பிரியா ராகவன் கடந்த 22 ஆண்டுகளாக பாரம்பரிய நாட்டியக் கலைக்காக தன்னை அர்ப்பணித்து வருகிறார் குழந்தைகள் முதல் பெரியவர் வரை பலருக்கு நாட்டியம் கற்பித்து வருவதோடு பொருளாதார சவால்கள் நிறைந்த குடும்பங்களைச் சார்ந்த திறமைசாலிகளுக்கு ஆதரவளித்து வருகிறார் மதுராந்தகம் பகுதியில் தனியார்திடலில்நடைபெற்றவிநாயகாநாட்டியாலயா சார்பாக மாணவிகள் வழங்கிய பிரம்மாண்டமான நாட்டிய நிகழ்ச்சி வெகு பிரம்மாண்டமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகதமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிமுதல்வர் சிவகுமார் துணைத் தலைவர்டாக்டர்சித்ராசுப்பிரமணி ஆகியோர் கலந்து மாணவிகளுக்குகேடயம்சான்றிதழ்வழங்கிபாராட்டு தெரிவித்தனர் இந்நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் என் 500க்கும் மேற்பட்டோர் மாணவிகள் வழங்கிய பிரம்மாண்டமான நாட்டிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



வடமதுரை அருள்மிகு விருந்தீஸ்வரர் திருக்கோயில் பிரதோஷம் சுவாமி திருவீதி உலா நடந்தது. இதில் திரளாக பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அன்னதானமும் வழங்கப்பட்டது

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.